**<u>சுருக்கம்</u>**

மாற்றுத் திறனாளிகள் நலன் – மாற்றுத் திறனாளிகள் தொழில் புரிய உதவும் வகையில் அவர்களுக்கு மோட்டார் பொருத்தப்பட்ட தையல் இயந்திரங்கள் இலவசமாக வழங்கிட நிர்ணயிக்கப்பட்ட தகுதிகளைத் தளர்த்துதல் மற்றும் செவித் திறன் குறையுடைய மாற்றுத் திறனாளிக்கும் மோட்டார் பொருத்தப்பட்ட தையல் இயந்திரங்கள் இலவசமாக வழங்குதல் – ஆணை– வெளியிடப்படுகிறது.

---

மாற்றுத் திறனாளிகள் நல(மா.தி.2.1)த் துறை

அரசாணை(நிலை) எண்.38 நாள்:12–07–2010

ஆனி 28, திருவள்ளுவர் ஆண்டு 2041

படிக்க:-

1. அரசாணை(நிலை) எண். 153, சமூக நலம் மற்றும் சத்துணவு திட்டத் துறை, நாள் 25.11.2009.
2. மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையரின் கடிதம் ந.க.எண். 3095/மா.திந3(1) 2009, நாள் 10.5.2010.

------

**<u>ஆணை:</u>**

மாற்றுத் திறனாளிகள் சுய தொழில் புரிய உதவும் வகையில் அவர்களுக்கு 2009–2010ம் நிதியாண்டு முதல் மோட்டார் பொருத்தப்பட்ட தையல் இயந்திரங்கள் இலவசமாக வழங்கப்படும் என மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் வெளியிட்ட அறிவிப்பினைத் தொடர்ந்து கை, கால் பாதிக்கப்பட்ட மாற்றுத் திறனாளிகள் 1350 பேர் பயன்பெறும் வகையில் இத்திட்டத்திற்கு ரூ. 55,35,000/– நிதி ஒதுக்கீடு செய்து மேலே ஒன்றில் படிக்கப்பட்ட அரசாணையில் ஆணை வெளியிடப்பட்டது. இத்திட்டத்தில் பயன்பெற பின்வரும் தகுதிகள் நிர்ணயம் செய்து ஆணை வெளியிடப்பட்டது.

- தேசிய மாற்றுத் திறனாளிகள் அடையாள அட்டை வைத்திருக்கும் மாற்றுத் திறனாளிகள் (இரு கைகளும் நல்ல நிலையில் உள்ளவர்கள்)
- குறைந்தபட்சம் 8ஆம் வகுப்பு தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும்.
- அரசு / அரசு உதவி பெறும் தையல் பயிற்சி நிறுவனங்களில் தையல் பயிற்சி சான்றிதழ் பெற்றிருக்க வேண்டும் (ஆறு மாதச் சான்றிதழ்)
- குடும்ப ஆண்டு வருமானம் ரூ. 24,000/–க்குள் இருத்தல் வேண்டும்.
- 18–45 வயதிற்குட்பட்ட மாற்றுத் திறனுடைய நபர்களாக இருத்தல் வேண்டும்.

2. தற்போது மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர் தையல் பயிற்சி பெற்று தற்சமயம் தையல் தொழில் புரிந்து கொண்டிருக்கும் விண்ணப்பதாரர்களில் 8 ஆம் வகுப்பு தேர்ச்சி பெற்ற பயனாளிகள் மிகக் குறைவாக உள்ளதால், கல்வித் தகுதியினைத் தளர்வு செய்தால் மேலும் அதிக பயனாளிகளைத் தேர்வு செய்யவும், தையல் பயிற்சி பெற்ற மாற்றுத் திறனாளிகள் பயனடையவும் அரிய வாய்ப்பாக அமையும் என்றும், சமூக நல ஆணையரகம் மூலம், சத்தியவாணிமுத்து அம்மையார் நினைவு இலவச தையல் இயந்திரம் வழங்கும் திட்டத்தில் பின்வரும் விதிமுறைகள் பின்பற்றப்படுகிறது என்றும் தெரிவித்துள்ளார்.

1. கல்வித் தகுதி இல்லை
2. வயது வரம்பு 18 முதல் 45 வரை
3. தனியார் நிறுவனங்களில் தையல் தெரியும் எனச் சான்று இருந்தால் போதும்
4. வருட வருமானம் ரூ.24,000/–க்குள் இருக்க வேண்டும்.

3. மாற்றுத் திறனாளிகளின் நலன் கருதி சத்தியவாணிமுத்து அம்மையார் நினைவு இலவச தையல் இயந்திரம் வழங்கும் திட்டத்தை பின்பற்றி மாற்றுத் திறனாளிகளுக்கு சுயதொழில் புரிய உதவும் வகையில் அவர்களுக்கு மோட்டார் பொருத்தப்பட்ட இலவச தையல் இயந்திரம் வழங்கும் திட்டத்திற்கு பின்வரும் தகுதிகளை நிர்ணயம் செய்யலாம் என்றும் தெரிவித்துள்ளார்.

1. கல்வித் தகுதி இல்லை
2. வயது வரம்பு 18 முதல் 45 வரை
3. தனியார் நிறுவனங்களில் தையல் தெரியும் எனச் சான்று இருந்தால் போதும்
4. வருமான வரம்பு இல்லை

மேலும் செவித் திறன் குறையுடையோருக்கு இதுவரை இலவசமாக காதொலிக் கருவிகள் மட்டுமே வழங்கப்பட்டு வருகிறது என்றும், மாற்றுத் திறனாளிகளில் செவித்திறன் குறையுடையோர் அதிக அளவில் வேலைவாய்ப்பின்றிச் சிரமப்பட்டு வருகின்றனர் என்றும், இவர்களுக்கும் இலவச மோட்டார் பொருத்திய தையல் இயந்திரம் வழங்குவதால் அவர்களால் குறைந்த நேரத்தில் அதிக அளவு தைத்து தங்களது சுய வேலை வாய்ப்பினைப் பெருக்கிக் கொள்ள இயலும் என்பதால் செவித்திறன் குறையுடையோருக்கும் இலவச மோட்டார் பொருத்தப்பட்ட தையல் இயந்திரம் வழங்க ஆணையிடுமாறும் மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர் கேட்டுக் கொண்டுள்ளார்.

4. மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையரின் கருத்துருவைக் கவனமாக பரிசீலித்து அதனை ஏற்று மோட்டார் பொருத்தப்பட்ட இலவச தையல் இயந்திரங்கள் வழங்கிட ஏற்கனவே நிர்ணயிக்கப்பட்ட தகுதிகளைத் தளர்த்தி பின்வரும் தகுதிகள் நிர்ணயம் செய்து அரசு ஆணையிடுகிறது.

1. மாற்றுத் திறனாளிகளுக்கான தேசிய அடையாள அட்டை
2. கல்வித் தகுதி இல்லை
3. வயது வரம்பு 18 முதல் 45 வரை
4. அரசு / அரசு உதவி பெறும் நிறுவனங்களில் சான்று அல்லது தனியார் நிறுவனங்களில் தையல் தெரியும் எனச் சான்று இருந்தால் போதுமானது.
5. வருமான வரம்பு இல்லை.

மேலும் செவித் திறன் குறையுடையோருக்கும் மோட்டார் பொருத்தப்பட்ட தையல் இயந்திரங்கள் இலவசமாக வழங்கவும் மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையருக்கு அரசு அனுமதி வழங்குகிறது.

6. இவ்வாணை நிதித்துறை அ.சா. எண். நிதி(சந)/35905/10, நாள் 07.07.2010ன் இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

சோ.சு. ஜவஹர்,
அரசுச் செயலாளர்.

பெறுநர்
மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர், சென்னை—6.
அனைத்து மாவட்ட ஆட்சியர்கள் / அனைத்து மாவட்ட மாற்றுத் திறனாளிகள் நல அலுவலர்கள்
(மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர் வழியாக)
சம்பளக் கணக்கு அலுவலர், சென்னை—5/35.
மாநில தலைமைக் கணக்காயர்—9/18/35.
மாநில தலைமைக் கணக்காயர் —18/35 (பெயரில்)

<u>நகல்:</u>
மாண்புமிகு முதலமைச்சரின் செயலாளர் (திரு. எஸ்.கே.பி), சென்னை—9.
செயலாளர் (மா.திந. துறை) அவர்களின் தனிச் செயலாளர், சென்னை—9.
நிதி (சமூக நலம்) / வரவு செலவு (பொது—II)த்துறை, சென்னை
இ.கோ/ உதிரி.

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

பிரிவு அலுவலர்.